Registered as a Newspaper　　பக்கங்கள் 04　　விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　　மக்கள் தினசரி　　Peoples Daily

நாதம் 04　　திருவள்ளுவர் ஆண்டு 2024　　கார்த்திகை 08　　(23-11-93)　　செவ்வாய்க்கிழமை　　ஓசை 278

நூலகம் ... மன்றம் யாழ்ப்பாணம்

## தமிழ்த் தினப் போட்டி இன்று பரிசளிப்பு

இவ்வாண்டுக்கான யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கான தமிழ்த் தினப் போட்டி திட்டமிடப்பட்டபடி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. கோட்ட/மாவட்டப் போட்டிகளில் வெற்றிபெற்ற முதல் மூவருக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் இன்று பிற்பகல் வழங்கப்படவிருப்பதுடன் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவிருப்பதாகவும் கல்வித்திணைக்கள வட்டாரம் தெரிவித்துள்ளது. இப்போட்டியில் வெற்றிபெற்றவர்களை தவறாது அழைத்துவரும்படி பாடசாலை அதிபர்களையும், ஆசிரியர்களையும் கேட்டுக்கொள்வதுடன் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களை தமிழ் வளர்ச்சிக்கழகமும், தமிழீழ (4ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரி தோல்வியின் விளைவு; இராணுவகட்டமைப்பில் மாற்றம்!

## யாழ். கிளிநொச்சி மாவட்டங்களுக்கு புதிய இணைப்பதிகாரி நியமனம்!

**பூநகரியில் சிறிலங்கா இராணுவத்திற்கு ஏற்பட்ட பாரிய பின்னடைவைத்தொடர்ந்து வடபகுதி இராணுவக் கட்டமைப்பில் பெரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இம் மாற்றங்களின்படி புதிய பதவிகள் சில உருவாக்கப்பட்டுள்ளதோடு, வடபகுதி முகாம்களுக்குப் புதிய தளபதிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர்.**

இம் மாற்றத்தின் பிரகாரம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு கூட்டு இராணுவ நடவடிக்கைத் தளபதி என்ற புதிய பதவி ஒன்று உருவாக்கப்பட்டு பிரிகேடியர் அசோகா ஜெயவர்த்தனா அதற்கு நியமிக்கப்பட்டுள்ளார். வடபகுதித் தளபதியாகக்கடமையாற்றும்மேஜர் ஜெனரல் றோகான் தலுவத்தையின் கீழ் இவர் செயற்படுவார்.

இதேவேளை கேணல் சரத் (4ஆம் பக்கம் பார்க்க)

## பிரிகேடியர் அசோகா ஜெயவர்த்தனா பதவி ஏற்றவுடன் பலாலி விரைவு

(கொழும்பு)

யாழ் கிளிநொச்சி பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்கு வசதியாக புதிய இராணுவ அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடபகுதியில் உள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இரு மாவட்டங்களிலும் மேற்...

இப் புதிய இராணுவ அதிகாரியாக பிரிகேடியர் அசோகாகே ஜெயவர்த்தனாநேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இரு மாவட்டங்களிலும் வெகுவிரைவில் புதிதாக மேற்கொள்ளப்படவிருக்கும் இராணுவ நடவடிக்கைக்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் மாவட்டங்களுக்கும் தனித்தனியான இராணுவ கட்டளையிடும் அதிகாரிகள் ஏற்கனவேகடமையில் உள்ளனர், இவர்களது நடவடிக்கைகளை கட்டுப்படுத்துபவராகவும் இப்புதிய இராணுவ அதிகாரி கடமையாற்றுவார்.

நேற்று நடைபெற்ற பதவி ஏற்பு வைபவத்தைத் தொடர்ந்து இவர் பலாலி விமானத்...

வெட்டுப்புள்ளி விவகாரம்

## மாணவர்களைச் சந்திக்க மானியக்குழு மறுப்பு

(கொழும்பு)

வெட்டுப்புள்ளியால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் சார்பாக சென்றவர்கள் கொழும்பில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவைச் சந்திப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

தமது குறைகளை எடுத்துக் கூறுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்று மாணவர் பிரதிநிதிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக கடிதம் மூலம் கருத்துக்கள் கேட்கும் என மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்து, மாணவர் பிரதிநிதிகளை சந்திக்காமல் திருப்பி அனுப்பியுள்ளது.

இதன் காரணமாக மாணவர் பிரதிநிதிகள ஏமாற்றமடைந்துள்ளனர்.

## புலிகளின் தாக்குதலில் விமானம் சேதமானது

(கொழும்பு)

பூநகரி - நாகதேவன்துறை மீதான தாக்குதலின்போது சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான விமானம் ஒன்று சேதமடைந்துள்ளது என கொழும்பு பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது

விடுதலைப் புலிகளின் தாக்குதலின்போது இந்த விமானம் சேதமடைந்தது என்று அதன் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## ஊரடங்கு அமுலின்போது செயலகம் இயங்காது

(நமது நிருபர்)

ஊரடங்கு அமுலில் உள்ள வரை யாழ் செயலகம் இயங்காதென மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

கடந்த பன்னிரண்டாம் திகதி யாழ். செயலகத்தின் மீது சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலை அடுத்து தற்போது திருத்த வேலைகள் மட்டுமே செயலகத்தில் நடைபெற்று வருகின்றன. இதேவேளை கடந்த காலங்களில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கின்ற போதும் யாழ். செயலகத்தின் பணிகள் தடங்கலின்றி இயங்கி வந்தமை தெரிந்ததே.

யாழ். செயலகத்தின் மீது சிறிலங்கா விமானப் படை சுப்பர்சொனிக் விமானம் தாக்குதலை மேற்கொண்டதை அடுத்தே ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் போது செயலகம் இயங்காதென தெரிவிக்கப்பட்டுள்ளது　(சி)

## நேற்று சாவகச்சேரியில் புக்காரா குண்டுவீச்சு!

(தென்மராட்சி)

இக்குண்டு சாவகச்சேரி...

## 'வெளிச்சம்' கார்த்திகை இதழ் இன்று வெளியாகின்றது

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான வெளிச்சம் -கார்த்திகை மாத இதழ் இன்று வெளிவருகின்றது. இந்த இதழ் 'மாவீரர் நாள்' சிறப்பிதழாக, மாவீரரைப் பற்றிய உணர்வுகளைப் பிரதிபலிக்கும் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள் ஆகியவற்றைத் தாங்கி வருகின்றது. இந்த இதழில் மாலிகாவின் முன்பக்கக் கவிதையும், 'நினைவழியா நாட்கள்' கவிதை நூலுக்கு தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் ( 4 ஆம் பக்கம் பார்க்க )

## 19 படை அதிகாரிகள் பூநகரியில் உயிரிழப்பு

### 620 சிப்பாய்களும், 117 கடற்படையினரும் பலி

(கொழும்பு)

பூநகரி இராணுவ முகாம் தாக்குதலின் போது இராணுவ கடற்படையை சேர்ந்த 19 அதிகாரிகள் உட்பட 756 பேர் பலியானதாக அல்லது காணாமல் போய்விட்டதாகவும் 550க்கு மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களிலிருந்து கிடைத்த தகவலில் இருந்து தெரியவந்துள்ளது

119 கடற்படையைசேர்ந்தவர்கள் தாக்குதலில் பலியானவர்கள் அல்லது காணாமல் போனவர்கள் என்றும் இதில் உயர் அதிகாரிகள் இருவர் அடங்குவார்கள் எனவும் கட ( 4 ஆம் பக்கம் பார்க்க )

## அரசின் உளவுப்படை சரியாக இயங்கவில்லை

### கேணல் அனுருத்த ரத்வத்தை

(கொழும்பு)

தகவல்களைப் பெறுவதில்...

என கொழும்பு பத்திரிகையில்

## ஊரடங்கு அமுலின்போது செயலகம் இயங்காது

(நமது நிருபர்)

ஊரடங்கு அமுலில் உள்ள வரை யாழ் செயலகம் இயங்காதென மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

கடந்த பன்னிரண்டாம் திகதி யாழ். செயலகத்தின் மீது சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலை அடுத்து தற்போது திருத்த வேலைகள் மட்டுமே செயலகத்தில் நடைபெற்று வருகின்றன. இதேவேளை கடந்த காலங்களில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கின்றபோதும் யாழ். செயலகத்தின் பணிகள் தடங்கலின்றி இயங்கி வந்தமை தெரிந்ததே.

யாழ். செயலகத்தின் மீது சிறிலங்கா விமானப் படை சுப்பர்சொனிக் விமானம் தாக்குதலை மேற்கொண்டதை அடுத்தே ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும்போது செயலகம் இயங்காதென தெரிவிக்கப்பட்டுள்ளது (சி)

## நேற்று சாவகச்சேரியில் புக்காரா குண்டுவீச்சு!

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான புக்காரா விமானமொன்று நேற்றுக் காலை தாக்குதலை நடாத்தியுள்ளது இக் குண்டு வீச்சு விமானம் காலை 6-15 மணியளவில் வந்து திடீரென குண்டொன்றை வீசியது.

இக்குண்டு சாவகச்சேரி வடக்கிலுள்ள குடிமனைகள் நோக்கி வீசப்பட்ட போதும் வயல்கரையில் வீழ்ந்து வெடித்ததால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இக்குண்டு வீச்சினால் வயல்கள் சேதமடைந்தன. அப்பகுதியில் பாரிய குழியொன்று காணப்படுகிறது. (86)

## குண்டுவீச்சு அதிர்ச்சி, குடும்பஸ்தர் மரணம்

(நமது நிருபர்)

யாழ் நகர்ப்பகுதியில் புக்காரா விமானம் நேற்று காலை மேற்கொண்ட குண்டுத்தாக்குதலின் அதிர்ச்சியினால்தண்ணீர்தாங்கியடியை சேர்ந்த செல்லத்துரைஜோன் விபுலானந்தராசா (வயது 55) என்பவர்மரணமானார்.

நேற்றுக்காலை யாழ்நகர் பகுதியை பெரும் இரைச்சலுடன் வட்டமிட்ட போர்விமானமான புக்காராவின் இரைச்சலை கேட்டதும் தனது கணவர் நெஞ்சை பொத்தியதாகவும் அவரின் முகம் பயப்பீதியால் குழம்பியிருந்ததை கண்டதான் அவருக்குதேநீர் கொடுத்துவிட்டு வீட்டினு

(4ஆம் பக்கம் பார்க்க)

வடபகுதி முகாம்களுக்குப் புதிய தளபதிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இம் மாற்றத்தின் பிரகாரம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு கூட்டு இராணுவ நடவடிக்கைத் தளபதி என்ற புதிய பதவி ஒன்று உருவாக்கப்பட்டு பிரிகேடியர் அசோகா ஜெயவர்த்தனா அதற்கு நியமிக்கப்பட்டுள்ளார். வடபகுதித் தளபதியாகக்கடமையாற்றும்மேஜர் ஜெனரல் றோகான் தலுவத்தையின் கீழ் இவர் செயற்படுவார்.

இதேவேளை கேணல் சரத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பிரிகேடியர் அசோகா ஜெயவர்த்தனா பதவி ஏற்றவுடன் பலாலி விரைவு

(கொழும்பு)

யாழ் கிளிநொச்சி பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்கு வசதியாக புதிய இராணுவ அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடபகுதியில் உள்ள யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இரு மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளை நெறிப்படுத்தி ஒருங்கிணைப்பதற்காகவும், கட்டளையிடல் சேவைக்காகவுமே இராணுவத்தில் இப் புதிய அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப் புதிய இராணுவ அதிகாரியாக பிரிகேடியர் அசோகாகே ஜெயவர்த்தனாநேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இரு மாவட்டங்களிலும் வெகுவிரைவில் புதிதாக மேற்கொள்ளப்படவிருக்கும் இராணுவ நடவடிக்கைக்கான திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கும் இவ்வாறான இராணுவ நடவடிக்கைகளுக்கான கட்டளைகளைப் பிறப்பிப்பதற்கும் அவற்றை ஒருங்கிணைப்பதற்கும் பிரிகேடியர் அசோகாகே ஜெயவர்த்தனா பொறுப்பாக இருப்பார்.

இவற்றைவிட மேற்படி இரு மாவட்டங்களுக்கும் தனித்தனியான இராணுவ கட்டளையிடும் அதிகாரிகள் ஏற்கனவே கடமையில் உள்ளனர், இவர்களது நடவடிக்கைகளை கட்டுப்படுத்துபவராகவும் இப்புதிய இராணுவ அதிகாரி கடமையாற்றுவார்.

நேற்று நடைபெற்ற பதவி ஏற்பு வைபவத்தைத் தொடர்ந்து இவர் பலாலி விமானத் தளத்துக்கு சென்று அங்கு பிரிகேடியர் நமுனியுடன் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து பேச்சுவார்த்தை நடாத்தினார்

இவர் இதற்கு முன்னர் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தமிழ் இளைஞர் கைது திடீரென மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பு நகரிலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் மலையகத்திலும் தமிழ் இளைஞர்களைக் கைது செய்யும் நடவடிக்கை திடீரென அதிகரித்துள்ளது.

கடந்த சில தினங்களில் பலர் இவ்வாறு கைது செய்யப்பட்டதாக குற்றப்புலன் விசாரணை பகுதியின் உயர் அதிகாரிஒருவர்தெரிவித்தார். அண்மையில் கண்டி நகரில் நடந்த சுற்றிவளைப்பில் மட்டும் 30 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் களனிபொலிஸ் அதிகாரி நளின்தொல்கொட தலைமையிலான குழுவே இவ் இளைஞர்களைக் கைது செய்தது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் பற்றிய விபரங்கள் எதுவும் வெளியிடப்படமாட்டாது எனவும் இவை மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும் எனவும் அவ் அதிகாரி தெரிவித்தார்.

தமிழ் இளைஞர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் சிறிலங்கா பாதுகாப்புப் படையினர், பொலிசார் மற்றும் தொண்டர் படையினர் இணைந்து தேடுதலில் ஈடுபட்டுள்ளனர் இதேவேளை களனி பகுதியில் கைதானவர்களில் 7பேர் விடுதலைப் புலிகள் உறுப்பினர் எனவும் அவ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

## யாழ். செயலகப் பகுதியில் நேற்றும் விமான குண்டு வீச்சு

### இருவர் படுகாயம்

(நமது நிருபர்)

குடாநாட்டின் மீது தொடரும் குண்டுத் தாக்குதலுக்கு மேலும் இருவர் நேற்று யாழ். செயலகத்திற்கு அண்மையில் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது: நேற்றுக் காலை 6.10 மணியளவில் யாழ் நகர பகுதியை வட்டமிட்ட புக்காரா விமானம் யாழ். செயலகத்திற்கு அண்மையில் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலுக்கு கண்டிவீதியைச் சேர்ந்த பரமேஸ்வரன் பிரசாத் (வயது 7) என்னும் சிறுவன் தனது வீட்டில் இருக்கும் போது வீட்டு கூரையை பிரித்துக் கொண்டு வந்த குண்டுச் சிதறல் ஒன்றினால் தாக்கப்பட்டு படுகாயமடைந்துள்ளார். இதேவேளை பூநகரி பகுதியைச் சேர்ந்த ஆசீர்வாதம் யேசுராசா (வயது 30) என்னும் குடும்பஸ்தர் இக் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி தனது கையொன்றை இழந்துள்ளார். மேற்படி இருவரும் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர். (சி)

**மாவீரர்நாள் நவம்பர்-27**

எதிரியின் பலம்......
அந்நிய வளங்கள்!
எமது பலம்......
தமிழீழ ஆத்ம பலம்!

**சுன்னாகம் வர்த்தக சங்கம்.**

(சி-7972)

## இன்று முதல் படகுச்சேவை

நேற்று வரை தடைப்பட்டிருந்த கிளாலி - பூநகரி படகுச்சேவை இன்று தொடக்கம் தொடர்ந்து வழமையான நேரத்திற்கு நடைபெறும்என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## 19 படை அதிகாரிகள் பூநகரியில் உயிரிழப்பு

### 620 சிப்பாய்களும், 117 கடற்படையினரும் பலி

(கொழும்பு)

பூநகரி இராணுவ முகாம் தாக்குதலின் போது இராணுவ கடற்படையை சேர்ந்த 19 அதிகாரிகள் உட்பட 756 பேர் பலியானதாக அல்லது காணாமல் போய்விட்டதாகவும் 550க்கு மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களிலிருந்து கிடைத்த தகவலில் இருந்து தெரிய வந்துள்ளது

119 கடற்படையைசேர்ந்தவர்கள் தாக்குதலில் பலியானவர்கள் அல்லது காணாமல் போனவர்கள் என்றும் இதில் உயர் அதிகாரிகள் இருவர் அடங்குவார்கள் எனவும் கட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் உளவுப்படை சரியாக இயங்கவில்லை

### கேணல் அனுருத்த ரத்வத்தை

(கொழும்பு)

''வடக்கு யுத்தநிலை குறித்து அரசின் உளவுப் பிரிவு சரியாக இயங்கவில்லை. உரிய தகவல்கள், மதிப்பீடுகள் எதுவும் அரசிடம் இல்லை எதிர்க்கட்சிகள் பற்றி உளவுத் தகவல் சேகரிப்போர் யுத்தமுனை குறித்து உளவுத் தகவல்களைப் பெறுவதில் கவனம் செலுத்தவில்லை'' இவ்வாறு பூநகரி இராணுவ முகாம் தாக்குதல் குறித்து பாராளுமன்றத்தில் பிரஸ்தாபித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் கேணல் அனுருத்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலும் வடபகுதியிலும் உசார் நிலையில் இராணுவம்!

### மாவீரர் வாரத்தில் புலிகள் தாக்கலாமாம்;

(கொழும்பு)

மாவீரர் வாரத்தில் விடுதலைப்புலிகள் பல தாக்குதல்களை நடத்தலாம் எனசிறிலங்காபுலனாய்வுத் துறையினருக்குகிடைத்த தகவல்களைஅடுத்து வடக்கு - கிழக்கு சிறிலங்கா படை முகாம்களுக்கும் கொழும்பு நகருக்குமான பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் வாரத்தில் புலிகள் கிழக்கு மாகாணம் மற்றும் சிறிலங்கா இராணுவம் தரித்துள்ள வவுனியா பகுதிகளில் தாக்குதல் நடத்தக் கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளதாகவும் கொழும்பில் குண்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் மாவீரர் வாரம்; எழுச்சிபூர்வமாக அனுஷ்டிப்பு

(வடமராட்சி)

மாவீரர் வாரத்தையொட்டி வடமராட்சிப்பகுதியெங்கும் எழுச்சிக் கோலம் பூண்டுள்ளது. மாவீரர்வாரத்தில் எழுச்சிக் கூட்டங்களும் மற்றும் பல நிகழ்வுகளும் ஒழுங்கு செய்யப்பட்டு நடைபெற்று வருகின்றன

இப் பகுதியில் வீதிகள் எங்கும் சிவப்பு மஞ்சள் வர்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. இக் கோட்டத்தில் பல வளைவுகள் வீதிக்கு குறுக்கே கட்டப்பட்டுள்ளன. வடமராட்சியில் எட்டு பிரதான பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன

பருத்தித்துறை வட்டத்தில் கிராமக் கோட்டடியில் பிரதான பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. இப் பந்தலில் 107 மாவீரர்களின் படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

கரவெட்டி வட்டத்திற்கான பிரதான பந்தல் நெல்லியடி பஸ்நிலையப்பகுதியில்அமைக்கப்பட்டுள்ளது. இப் பந்தலில் 86 மாவீரர்களின் படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

உடுப்பிட்டி வட்டத்திற்கான பிரதான பந்தல் உடுப்பிட்டிச் சந்தியில் அமைக்கப்பட்டு அங்கு 80மாவீரர் படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

வடமராட்சி வடக்கு கடற்புலிகளுக்கான பிரதான பந்தல்கள் வல்வெட்டித்துறையிலும், பருத்தித்துறை பழைய பஸ்நிலையத்திலும், ஹாட்லிக் கல்லூரி மைதானத்திலும் அமைக்கப்பட்டுள்ளன.

வடமராட்சி வடக்கு கடற்புலிகள் பிரதேசத்தில் வீரச்சாவடைந்த 225 மாவீரர்களது படங்கள் மேற்குறித்த பந்தல்களில் வைக்கப்பட்டுள்ளன.

வடமராட்சிகிழக்குப் பகுதியிலும் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன. அப்பகுதியில் வீரச்சாவடைந்த சுமார் 200 மாவீரர்களது படங்கள் வைக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை ஓராம் கட்டையில் உள்ள ரஞ்சன் சித்தப்பா பூங்காவைச் சுற்றி பிரதான வீதிகளில் 12 வளைவுகளும், வடமராட்சி மாவீரர் துயிலும் இல்ல வீதிகளில் 40 வளைவுகளும் கட்டப்பட்டுள்ளன. இப் பகுதியில் நவிண்டில் சந்தியில் இருந்தும் சமரபாகு சந்தியில் இருந்தும் நாச்சிமார் கோவில் சந்தி வரையில் 40 வளைவுகள் கட்டப்பட்டுள்ளன. நாச்சிமார்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

வெள்ளிக்கிழமை (19-11-93) சுப்பிரமணியம் ஞானஸ் காந்தவதனி என்பவருடைய பட்டமளிப்புச் சான்றிதழ் திருநெல்வேலிக்கும் நீர்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வணிக முகாமைத்துவ அலுவலகம் யாழ்பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்கும்படி வேண்டுகிறேன் (6666)

### தேவை

வெற்று எண்ணெய் பரல்களை விற்பனை செய்ய விரும்புவோர் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டியமுகவரி:- இல.10, செம்பியன் லேன், கொக்குவில் (சி-7981)

### உதிரிப்பாகங்களுக்காக மணிக்கூடுகள்

உதிரிப்பாகங்களுக்காக மணிக்கூடுகள் வாங்கப்படும் சகலமணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்தப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளைகண்டி வீதி, சாவகச்சேரி. (சி-7849)

### பட்டப்பின் கல்வித் தகைமை 1992 93 கற்கை நெறிக்குப் பதிவு செய்தல்

பட்டப்பின் கல்வித் தகைமை 1992/93 கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களை 1993-12-20ஆம் திகதிக்கு முன் பதிவு செய்யும்படி கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இவர்களின் பெயர்ப்பட்டியல் ஒன்றும் பல்கலைக்கழக அறிவித்தல் பலகையில் போடப்பட்டுள்ளது.

பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
(சி-7977)

## விவசாயப்பயிற்சிவகுப்புகள்

விவசாயிகள் நவீன தொழில் நுட்ப முறைகளை அறிந்து கொள்ளவும், தங்களுக்கு நடைமுறையில் ஏற்படும் பிரச்சினைகளை கலந்து பேசி தீர்வுகளை அறிந்து கொள்ளவும் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வகையில் இன்று காலை 9.30 மணியளவில் சுழிபுரம் வீரபத்திரர் கோவிலடிப் பகுதியிலும், கைதடி வடக்கு பாலர் பாடசாலைப் பகுதியிலும் பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளன.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் செல்வராசா சசிகுமார்

(அச்சுவேலி கொலமவனற, இடைக்காடு மகாவித்தியாலயம், யாழ மத்திய கல்லூரி ஆகியவற்றின் மாணவன்)

ஆண்டவன் அளிப்பு: 06-04-1978
ஆள்பவன் அழிப்பு; 23-11-1990

ஈவிரக்க மற்றஹெலி வானில் வந்து
ஏவிட்ட வேட்டுமக்கு எமனாச்சே!
சாவுமணி அடிப்பதற்கு தூதாய் வந்த
சண்டாளர் நாம தவிககச் சதிசெய்தாரோ!
மேவுமருட் செல்வ மெங்கள சசிகுமார் நீ
மேலுலகைச் சென்றடைந்து மூன்றாண்டாச்சு
நீ விரும்பிப் பூசித்த நிமலன தனை
நெககுருகிப் பிரார்த்திப்போம் சாந்திக்காக

எமது அன்பு செல்வத்தை என்றும் நினைவு கூரும்

மாயவன் ட்ரான்ஸ்போட், சங்கானை வீதி, அச்சுவேலி. (6649)

அன்பகலா அப்பா, அம்மா, சகோதரர்கள், உற்றார், உறவினர், ஆசிரியர்கள், சகமாணவர்கள், நண்பர்கள்.

## மாவீரர் வார சிரமதான பணிகள்

மாவீரர் வாரத்தை முன்னிட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் இன்று காலை பத்து மணிக்கு வண்ணார் பண்ணை ஐயனார் கோவில் வீதியை துப்புரவு செய்வதிலும், மரக்கன்று நடுதலிலும் ஈடுபடவுள்ளனர். பிற்பகல் மூன்று மணியளவில் பட்டுவெளி விவசாய வீதியில் தூர்ந்து போயுள்ள அணைக்கட்டை புனரமைப்பதிலும் ஈடுபடுவர். அத்துடன் பிரான்பற்று பகுதியில் வெள்ள வாய்க்காலையும் நவாலி வடக்கு வெள்ள வாய்க்காலையும், மானிப்பாய் தெற்கு சோதி வேம்படி வீதியையும், சங்குவேலி விவசாய வீதியையும்துப்புரவு செய்வதிலும், வட்டுக்கோட்டை கிழக்கு பிரசாத் வீதியையும், சுழிபுரம் கல்லை வேம்படி வீதியையும், அராலி வடக்கு டச் வீதியையும் துப்புரவு செய்வதில் ஈடுபடவுள்ளனர்.

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
02- 07- 1987

உதிர்வு
23- 11- 1991

### நித்தியா யோகநாதன்

தம்மைத்தாமே ஆள்கின்ற தகுதி பெற்ற ஓர் இனம் என்ற நம்பிக்கையற்று பல்வேறு பிரிவுகளாக பிளவுபட்டு அடங்கி, ஒடுங்கி, அடி பணிந்து வாழ்ந்த தமிழினம் சக்திமிக்கதோர் தலைமையின் கீழ் வீறு கொண்டெழுந்துள்ளதை காண்கின்ற எதிரிகள சூழ்ச்சிகள் மூலம் தமிழினத்தை அழித்தொழிக்க முனைகிறது.

இச்சூழ்ச்சிகளின் ஓர் அங்கமாகவே எமது குழந்தைகளின வாழ்வுரிமையை மறுக்கவும் பறிக்கவும் தீவிரமாகச் செயல்படுகிறது.

சிங்கள அரசு ஏற்படுத்தும் இடம்பெயர்வுகள், நெருக்கடியான வாழ்க்கை, சுகாதாரச் சீர்கேடுகள், சூழல் மாசடைதல், போஷாக்கான உணவுப்பொருட்கள் கிடையாமை, மருத்துவ வசதிகள் இன்மை போன்ற பல்வேறு காரணிகளில் இருந்து எமது குழந்தைகளைக் காத்து அறிவும், வலுவும் உள்ளதோர் சந்ததியை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்.

எமக்கு ஏற்பட்டுள்ள அவலநிலை வேறு
எவருக்கும் ஏற்படக் கூடாதென விரும்பும்

தலையாழி, கொக்குவில், (6647)

அப்பா, அம்மா, அப்பம்மா, உமாஅக்கா, உறவினர்கள்.

## மூன்று அப்பாவித் தமிழர் வவுனியாவில் கைது!

வவுனியா மாவட்டத்தில் உள்ள சாளம்பைக்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மூன்று அப்பாவிப் பொது மக்களை கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் பம்பைமடு சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் சாளம்பைக்குளம் என்ற கிராமத்துக்குள் நுழைந்து அக்கிராமத்தையும் சுற்றி வளைத்தனர் பின்னர் அக்கிராமத்தில் நடாத்திய தேடுதலின் போது மூன்று அப்பாவிப் பொதுமக்களைக் கைது செய்து தம்முடன் கூட்டிச் சென்றனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இக்கிராமத்தில் தேடுதல் நடாத்திய படையினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தியதாகவும் இராணுவத்தினருக்கு இத்தாக்குதலால் இழப்பு ஏற்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

## நினைவு கூருகின்றோம்.

23-11-1993

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் திருமலை - திரியாய்ப் பகுதியில் வீரச்சாவெய்திய -

**தருமன்** (விஜயநாதன் சத்தியநாதன் - அன்புவழிபுரம் - திருமலை)

1986ஆம் ஆண்டு பருத்தித்துறையில் தவறுதலாக கைக்குண்டு வெடித்ததில் எமைப் பிரிந்த -

**பில்லா** (கஸ்பர் ராசாவின்சன்ற் பெனடிக்ற் - முள்ளியான் - வடமராட்சி கிழக்கு)

1987ஆம் ஆண்டு திருமலையில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

1989ஆம் ஆண்டு கிளிநொச்சி திருவையாற்றுப் பகுதியில் தேசவிரோதிகளுடனான சமரின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

திருவையாறு அரசியல் பொறுப்பாளர்

**கமல்** (பாலச்சாமி சிவகுமார் - இல. 75, திருநகர் - கிளிநொச்சி)

அம்பாறை, கல்முனைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 03 தமிழர்கள்.

யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ் செயலக கணக்காளரான தமிழ்ப் பொதுமகன்.

1990ஆம் ஆண்டு மாங்குளம் சிறிலங்கா இராணுவ முகாம் மீதான கரும்புலித் தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

**கரும்புலி லெப். கேணல் போர்க்** (மாப்பாணப்பிள்ளை அரசரத்தினம் - ஆறுமுகத்தான் புதுக்குளம், ஓமந்தை - வவுனியா)

இதே முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய-

**சுதா** (சுதர்மினா செல்வரட்ணம் - மாமூலை, முள்ளியவளை - முல்லைத்தீவு)

**ஆனந்தராஜ்** (நாகராசா தம்பிராசா - ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

**இம்ரான்** (வேலுப்பிள்ளை குணதர்மன் - 3-ம் கண்டம், முத்தையன்கட்டு - முல்லைத்தீவு)

**மேஜர் கரன்** (நல்லதம்பி நடராசா - செல்வபுரம் வடக்கு - வவுனியா)

**மேஜர் பிரபா** (தியாகராசா தேவகிருஷ்ணகுமார்- செட்டிகுளம் - வவுனியா)

**லெப். கோபு** (மரியநாயகம் கிறிஸ்ரிகுமார் -பெரிய தம்பனை - வவுனியா)

**றம்சின்** ( — தமிழ்ச்செல்வன் - பூவரசங்குளம் - வவுனியா)

**லிங்கராஜ்** (சுப்பிரமணியம் கதிர்காமநாதன் - மதகுவைத்தகுளம் - வவுனியா)

**லோறன்ஸ்** ( — தவனேஸ்வரன் - பெரியமடு, புளியங்குளம், ஓமந்தை - வவுனியா)

**கோணேஸ்** (சூசைப்பிள்ளை ஜெயசீலன் - நெளுக்குளம் - வவுனியா)

## மூன்றாமாண்டு நினைவு வணக்கம்

பட்டப்பின் கல்வித் தகைமை 1992/93 கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களை 1993-12-20ஆம் திகதிக்கு முன் பதிவு செய்யும்படி கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இவர்களின் பெயர்ப்பட்டியல் ஒன்றும் பல்கலைக் கழக அறிவித்தல் பலகையில் போடப்பட்டுள்ளது.

பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

(சி-7977)

---

ஈவிரக்க மற்றஹெலி வானில் வந்து
ஏவிட்ட வேட்டுமக்கு எமனாச்சே!
சாவுமணி அடிப்பதற்கு தூதாய் வந்த
சண்டாளர் நாம தவிக்கச் சதிசெய்தாரோ!
மேவுமருட் செல்வ மெங்கள சசிகுமார் நீ
மேலுலகைச் சென்றடைந்து மூன்றாண்டாச்சு
நீ விரும்பிப் பூசித்த நிமலன தனை
நெககுருகிப் பிரார்த்திப்போம் சாந்திக்காக


எமது அன்பு செல்வத்தை என்றும் நினைவு கூரும்

மாயவன் ட்ரான்ஸ்போட்,
சங்கானை வீதி,
அச்சுவேலி.
(6649)

அன்பகலா அப்பா,
அம்மா, சகோதரர்கள்,
உற்றார், உறவினர், ஆசிரியர்கள்,
சகமாணவர்கள், நண்பர்கள்.

---

# மூன்றாமாண்டு நினைவு வணக்கம்



## 2-ம் லெப். மாரியாச்சி

### செல்வி குணசிங்கம் அருள்மொழி (சிந்தனா)

(23-11-1990இல் மாங்குளத்தில் பேரினவாதப் படையோடு நடந்த நேரடி மோதலில் இன்னுயிர் ஈந்து தமிழீழ மண்ணுக்கு வித்தாகினார்)

எங்களுயிர் தமிழீழம் என்ப தாலே
எதிர்த்ததனை அழிக்கவரும் உலுத்தர் எண்ணம்
பங்கமுறக் களஞ்சென்று படைய ழித்துப்
பாவிகளின் விழுப்புண்ணை ஏற்று வீழ்ந்த
தங்கமன மாவீரர் வரிசை தன்னில்
தன்பெயரைப் பொறித்திட்ட எங்கள் செல்வி
மங்கலிலாப் புகழாட்டி மாரியாச்சி!
மனங்குளிர நினைந்தவளை வணங்குகின்றோம்.

நினைவால் நிறைந்த நெஞ்சினரான
பெற்றோர், உடன் பிறந்தோர்,
உறவினர்கள், நண்பர்கள்.

(சி-7976)

---

ழிக்க முனைகிறது.

இச்சூழ்ச்சிகளின் ஓர் அங்கமாகவே எமது குழந்தைகளின வாழ்வுரிமையை மறுக்கவும் பறிக்கவும் தீவிரமாகச் செயல்படுகிறது.

சிங்கள அரசு ஏற்படுத்தும் இடம்பெயர்வுகள், நெருக்கடியான வாழ்க்கை, சுகாதாரச் சீர்கேடுகள், சூழல் மாசடைதல், போஷாக்கான உணவுப்பொருட்கள் கிடையாமை, மருத்துவ வசதிகள் இன்மை போன்ற பல்வேறு காரணிகளில் இருந்து எமது குழந்தைகளைக் காத்து அறிவும், வலுவும் உள்ளதோர் சந்ததியை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம்.

எமக்கு ஏற்பட்டுள்ள அவலநிலை வேறு
எவருக்கும் ஏற்படக் கூடாதென விரும்பும்

தலையாழி,
கொக்குவில்,
(6647)

அப்பா, அம்மா,
அப்பம்மா, உமாஅக்கா,
உறவினர்கள்.

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு:
23
-
03
-
1972



வீரச்சாவு:
23
-
11
-
1992

## கப்டன் கதிரவன்

(மருத்தீனுப்பிள்ளை கிறிஸ்ரியன் பெர்னான்டோ)
எழுவைதீவு

கதிரவா உன் பாதம் பட்ட மண்ணை — நாம்
தேடுகிறோம்
உன் மழலை மொழியில் மகிழ்ந்த -- நாட்களை
எண்ணுகின்றோம்
ஆனால் — எம்மிடம் தான் நீயில்லை
மண்ணுக்காய் நீ மரணித்தபோதும் — உன்
பிறந்த மண்ணில் இறுதிக்கடன் செலுத்தமுடியாது
போனதடா
குருவான வாழ்வுதேடி, கொள்கையுடன்
தான் இணைந்து
மக்களின் மனங்களை வென்றெடுத்த கதிரவனே!
கலங்குகின்ற எம்நிலையை
காணாது சென்றாயோ!
எங்களின் உள்ளத்தில் ஒளிதரும் கதிரவனாய்
மழலைகளின் மாமாவாக, மற்றவரின் சோதரனாய்
என்றென்றும் நிலைத்துநின்ற — இனிய கிறிஸ்ரியா,
நீ,
மறைந்து ஆனதே வருடம் ஒன்று
ஆறுமா எம் மனம்,

வேதனையின் விளிம்பில் நின்று உனைத்தேடும்

தும்பளை,
பருத்தித்துறை
(6651)

குடும்பத்தினர்

---

...பிள்ளை அரசரத்தினம் - ஆறுமுகத்தான்
புதுக்குளம், ஓமந்தை - வவுனியா)

இதே முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய-

**சுதா** (சுதர்மினா செல்வரட்ணம் - மாமூலை, முள்ளியவளை - முல்லைத்தீவு)
**ஆனந்தராஜ்** (நாகராசா தம்பிராசா - ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)
**இம்ரான்** (வேலுப்பிள்ளை குணதர்மன் - 3-ம் கண்டம், முத்தையன்கட்டு - முல்லைத்தீவு)
**மேஜர் கரன்** (நல்லதம்பி நடராசா - செல்வபுரம் வடக்கு - வவுனியா)
**மேஜர் பிரபா** (தியாகராசா தேவகிருஷ்ணகுமார்- செட்டிகுளம் - வவுனியா)
**லெப். கோபு** (மரியநாயகம் கிறிஸ்ரிகுமார் -பெரிய தம்பனை - வவுனியா)
**றம்சின்** ( — தமிழ்ச்செல்வன் - பூவரசங்குளம் - வவுனியா)
**லிங்கராஜ்** (சுப்பிரமணியம் கதிர்காமநாதன் - மதகு வைத்தகுளம் - வவுனியா)
**லோறன்ஸ்** ( — தவனேஸ்வரன் - பெரியமடு, புளியங்குளம், ஓமந்தை - வவுனியா)
**கோணேஸ்** (சூசைப்பிள்ளை ஜெயசீலன் - நெளுக்குளம் - வவுனியா)
**கப்டன் எழில்** (தர்மலிங்கம் செல்வராசா - உருத்திரபுரம் கிழக்கு - கிளிநொச்சி)
**கப்டன் ரசாத்/ரசாக்** (சிவசுப்பிரமணியம் சுரேஸ்குமார் - இல. 63, கணேசபுரம் - கிளிநொச்சி)
**நியூட்டன்** (குணசேகரம் ஜெயரட்ணம் - 178, இந்திரஜித்துவீதி, வட்டக்கச்சி - கிளிநொச்சி)
**விஜி** (நவரத்தினம் நிக்சன் மதன்ராஜ் - இல. 136, ஜெயந்திநகர் - கிளிநொச்சி)
**லெப். வர்ணன்** (இராசரத்தினம் இராமலிங்கம் - நெட்டாங்கண்டல், உயிலங்குளம் - மன்னார்)
**லெப். தில்லை** (பொன்னுத்துரை பத்மநாதன் - சகாயவீதி, அடம்பன் - மன்னார்)
**லெப்.றொபேட்** (சம்பூரணம் ஜெயசிங்கம் அன்ரன்- முருங்கன்பிட்டி-மன்னார்)
**2-ம் லெப்.ரஞ்சன்** (திரவியம் சேவியர் செல்வம்- பனங்கட்டிக்கொட்டு-மன்னார்)
**2-ம் லெப்.மாரியாச்சி** (அருள்மொழி குணசிங்கம்- 16/2, பாரதிஒழுங்கை-யாழ்ப்பாணம்)
**2-ம் லெப்.யேசு** (முருகேசு மகேந்திரன்-அராலிவடக்கு, வட்டுக்கோட்டை-யாழ்)
**2-ம் லெப்.தும்பன்** (துரைராசா பாலராசா- தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்-யாழ்)

மாங்குளம் சிறிலங்கா இராணுவ முகாம் தகர்ப்பின் போது விழுப்புண் அடைந்து வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.குமரன்** (பொன்னையா சிவசக்தி-நெளுக்குளம்-வவுனியா)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட, கோப்பாவெளி, ஆறுமுகத்தான் குடியிருப்பு பகுதிகளைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய,

**புவனன்** (சி.புவனேந்திரன்-கோயில்போரதீவு-மட்டு)

இதேதினம் எதிர்பாராதவிதமாக ஆற்றில் மூழ்கியதில் எமைப்பிரிந்த,

**புனிதன்/குளியா** (பாலசிங்கம் சிவானந்தன்-சேனையூர், மூதூர்-திருமலை)

1992ஆம் ஆண்டு வவுனியா, ஓமந்தையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் கதிரவன்** (மருத்தீனுப்பிள்ளை கிறிஸ்ரியன் பெர்னான்டோ 4-ம் வட்டாரம்- எழுவைதீவு)

சுழிபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பொதுமக்கள் குடியிருப்புகள் மீது மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட 05 பொதுமக்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-7975)

நல்லூர் பிர நூலகம்
மன்றம்
யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு

அனுபவம், விவேகத்திற்கு நண்பனாய் இருந்தால் சிறந்த நண்பனாய் அமையும்

— எட்வர்ட் யஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 23-11-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
த. பெ எண் - 05

# பிரச்சினை சிறிதல்ல! இதைப்புரிய ஆறு மாதம்

சிலர் மற்றவர்களின் அனுபவத்தின் மூலம் பாடம் கற்றுக் கொள்கின்றார்கள். பலர் நேரடியாக அனுபவித்த பின்னரே கற்றுக் கொள்கின்றார்கள். சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்போல் உள்ளது. அவர் பட்டுத் தெளிந்த பின்தான் பாடம் கற்பவர் போல் உள்ளது.

இல்லாதுவிடில், தமக்கு முன் இருந்த சிங்களத் தலைவர்கள் யாவரும் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முற்பட்டு தோற்றுப் போனதை அவர் ஒரு படிப்பினையாகப் பெற்றிருக்க வேண்டும். ஆனால், அவரால் முன்னைய தலைவர்களின் வழிமுறைகள் பிழை என்பதைக் கண்டுகொள்ள மட்டுமே முடிந்தது. ஆனால் அதற்கு அவர் எடுத்த முடிவோ அவற்றை விட மோசமானதாகவும், தவறானதாகவும் இருந்தது. இரவோடு இரவாக இவர் எடுத்த முடிவானது இனப் பிரச்சினை என்பதே இல்லை. பயங்கரவாதப் பிரச்சினை மட்டுமே உள்ளது. இதற்கு ஒரே தீர்வு இராணுவத்தீர்வு எனப பிரகடனப்படுத்தியது.

அத்தோடு, இனப்பிரச்சினைக்கான இராணுவத் தீர்விற்கு காலவரையறையும் விதிக்கப்பட்டது. முன்னைய தலைவர்கள் விதித்த காலக்கெடுக்கள் தோற்றுப் போனதை அவர் கருத்தில் கொள்ளவில்லை, எதிர்வரும் யூன் மாதத்திற்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என முதலில் பிரகடனப்படுத்தினார். ஆனால், மண்கிண்டி மலையிலும், ஒப்பரேசன் யாழ்தேவியிலும் ஏற்பட்ட தோல்வியின் பின்னர், அடுத்த வருட இறுதியில் நடைபெறவுள்ள ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தலின் முன் இனப்பிரச்சினைக்குத் தீர்வெனக் காலக்கெடுவை ஆறு மாதம் பிற்போட்டார்,

ஆனால், தற்பொழுது அதாவது பூநகரி இராணுவ-கடற்படைத் தளம் தகர்ப்பின் பின் ''இப்பிரச்சினைக்கு ஒரே இரவில் தீர்வு காண முடியாது. சிந்தித்துத்தான் முடிவெடுக்க வேண்டும்'' எனத் தெரிவித்துள்ளார். அதாவது, சுமார் ஆறு மாத காலத்திற்கு மேல் ஜனாதிபதிப் பதவி அனுபவம் அவருக்குத் தேவையாக இருந்தது. இது சிறிய பிரச்சினையல்ல, சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய பெரிய பிரச்சினை என்பதைப் புரிந்து

## இந்தியக் கடவுச் சீட்டு பெற்றவர் உடன் அனுப்பப்பட வேண்டும்
### தினேஷ் குணவர்த்தனா

(கொழும்பு)

இந்தியக் கடவுச் சீட்டுக்களுடன் மலையகத்தில் வாழும் சுமார் 1,69000 பேரையும் உடனடியாக விமானம் மூலம் திருப்பி அனுப்ப வேண்டும் என்று மகாஜன எக்சத் பெரமுனவின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தனா கூறியுள்ளார்.

கண்டி டி. எஸ். சேனநாயக்கா கேட்போர் கூடத்தில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்,

மலையக சிங்கள மக்களின் சொந்த நிலங்களில் 3லட்சம் ஏக்கர் காணிகளை வெள்ளை ஏகாதிபத்திய வாதிகள் கொள்ளையடித்து தேயிலை, ரப்பர், தென்னைப் பயிர் என்பனவற்றை உற்பத்தி செய்தனர். இதனால் சிங்கள பௌத்த மக்களின் கலை, கலாசாரங்கள் சீரழிக்கப்பட்டன.

இந்தியாவிலிருந்து 50,60 வருடங்களுக்கு முன்பு இங்கு வந்தவர்களுக்கு நம்நாட்டு குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. கிராம மக்களின் நிலமெல்லாம் தேயிலை பயிரிடப்பட்டு இந்தியர்களுக்கு இடமளிக்சப்பட்டதால் நம்நாட்டின் உணவுற்பத்தி பாதிப்புக்கு உள்ளாகியது இதனால் வருடாவருடம் அதிகம் அதிகமாக மாவு இறக்குமதி செய்யப்படும் நிலை ஏற்பட்டது.

மலையக சிங்கள மக்களின் பாரம்பரிய நிலங்களை சிங்கள மக்களுக்கே உரித்தாக்க வேண்டுமானால் 1,69,000பேரையும் இந்தியாவுக்கே அனுப்பிவைக்க வேண்டும்.

அத்துடன்தேயிலைபயிரிடப்பட்டதாலேயே சூழலுக்கு பாதிப்புஏற்பட்டது. மண்சரிவுகள்ஏற்பட்டது. 1866இல் நம் நாட்டில் 84வீதம் காடுகள் இருந்தன. இன்றோ இது 24 சதவீதமாகி விட்டது. 9000 அடிக்கும் உயரமான பகுதியில் பயிர் செய்யாமல் சூழலைப் பாதுகாத்தால் மட்டுமே நாட்டில் ஏனையோர் வாழலாம் என்றும் குறிப்பிட்டார்.

## கொழும்பு ரயிலின் சீர்கேடு பயணிகள் பெரும் அவதி

(கொழும்பு)

கொழும்புக்கும் வவுனியாவுக்கும் இடையே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இரவு நேர ரயிலில் பயணம் செய்வதற்கு குடை அவசியமானது என்று கூறப்படுகின்றது.

ரயிலின் கூரையிலிருந்து ஏற்படும் ஒழுக்குகளால் படுக்கை (பேர்த்)பகுதியின்ஆசனங்கள் நனைந்து போவதாகவும், ஜன்னல்களை மூடிவிட்டபோதிலும் ரயில் ஓடும்போது மழைநீர் வாரி இறைக்கப்படுவதாகவும், பயணி ஒருவர் மேலும் தெரிவித்தார்,

மேலும் முதலாம், இரண்டாம் வகுப்பு படுக்கை பெட்டிகள் மிகச் சீர்கேடான நிலையில் இருப்பதுடன் துர்நாற்றம் வீசுவதாகவும், மலசல கூடங்கள் துப்புரவு செய்யப்படாமல் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

பெரும் கஷ்டத்துடனேயே பயணிகள் இரவு ரயிலில் பயணம் செய்வதாகவும் தெரிய வருகிறது.

## பேச்சு எதுவுமின்றி அண்ணன் தண்ணீரில் கிடந்தார்
### சுடுபட்டு மரணமானவரின் தம்பி விபரிப்பு

(தொல்புரம்)

அண்ணனும், நானும் வழமைபோல் படுப்புவலைத் தொழிலிற்குபொன்னாலைச் சந்தியிலிருந்து கடலிற்கு சென்றோம் நான்காம் பாலத்திற்கு வடக்குப் பக்கமாகவுள்ள கடலில் நாம் இருவரும் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை திடீரென எம்மை நோக்கி சரமாரியான துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டார். கிட்டச்சென்று பார்த்த போது இடதுபக்க காதடியில் துப்பாக்கிச் சன்னம்பட்டு காயப்பட்ட நிலையில் நினைவிழந்து காணப்பட்டார். ஏனைய மீனவர்களின் உதவியுடன் கரைசேர்த்த போது அண்ணன் மரணமடைந்து விட்டதை உணர்ந்து கொண்டேன் என நேற்று முன்தினம்

## மாவீரர் நினைவாக சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தையொட்டி நாவற்குழி லவனிதா குடியிருப்பில் உள்ள மாவீரர் படிப்பகம் சிரமதானம் மூலம் திருத்தி அமைக்கப்பட்டு சுத்தம் செய்யப்பட்டது அத்துடன் குடியிருப்பின் சுற்றுப்புறங்களும் சிரமதானம் மூலம் குடியிருப்பு மக்களால் சுத்தம் செய்யப்பட்டன.(22)

## ஜெரிடிசில்வா பதவிக்காலம் நீடிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தின் பிரதம படைத்துறை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜெரிடி சில்வாவின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து மேலும் ஒரு வருடத்திற்கு அவரின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

ஜெரிடி சில்வா 1960 இல் சிறிலங்கா இராணுவத்தில் சேர்ந்தார் வடக்கிலும் கிழக்கிலும் இவர் இராணுவ உயர்அதிகாரியாக செயலாற்றியிருந்தார்.

## விழித்து எழுந்து வா; விடியலைப் பிரசவிப்போம்

இளைய தோழனே
இன்னுமா நீ உறக்கத்தில்
விழித்து எழுந்து வா
விடியலைப் பிரசவிப்போம்

திரண்ட உன் தோள்கள்
தினவோடு எழுந்தால்
திசைகள் எங்கும் - எதிர்ப்
படை சென்று முடங்கும்

காற்றை உன் கால்களாக்கி
புயலாய் நீயும் புறப்பட்டால்
தடைகள் பொடியாகும்-எதிரித்
தலைகள் தரைசாயும்

காலம் உன் காலடியில்
கைகட்டி நிற்கிறது - உன்
கோலத்தைப் புதிதாய்
குருதியால் எழுது.

வைகறை உன் வாசலில்
கிழக்கு உன் முற்றத்தில்
விழித்து நீ எழுந்தால்
விடியல் உனக்கு வாழ்த்து இசைக்கும்!

இளைய தோழனே
இன்னுமா நீ உறக்கத்தில்
விழித்து எழுந்து வா
விடியலைப் பிரசவிப்போம்

-- எஸ். உமாஜிப்ரான்

# பூநகரி தோல்வி சிங்களவருக்கல்ல அரசாங்கத்திற்கே அவமானம்!
### வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

பூநகரியில் ஏற்பட்ட தோல்வி சிங்களமக்களுக்கல்லஅரசாங்கத்திற்கே அவமானத்தை ஏற்படுத்துகின்றது என வாசுதேவநாணயக்கார எம். பி. பாராளுமன்றத்தில் கூறினார்

அவர் மேலும் பேசும் போது, பூநகரியிலும், கிளாலியிலும் பெருந்தொகையான ஆயுதங்கள் இழக்கப்பட்டன. இவற்றின் பெறுமதி பல்லாயிரம் மில்லியன்களாகும் இந்த இழப்பை ஈடுசெய்ய வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பாடு இல்லை. இதனால் எதிர்காலத்தில் வேறு வழிகளில் இப்பணம் மக்கள்மீது சுமத்தப்படும்.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண அரசிடம் திட்டம் இல்லை.

பூநகரியில் அரசாங்கம் படுதோல்வி அடைந்துள்ளது. இது சிங்கள இனத்திற்கு தோல்வியல்ல

யுத்தத்தின் மூலமாக தீர்வை நாடுவதைவிட தீர்வின் மூலமாக யுத்தத்தை நிறுத்துவதே சிறந்தது.

பேச்சுவார்த்தைக்கு வந்தால் ஒரு மருந்திருக்கிறது. வராமல் விட்டால் வேறு மருந்திருக்கிறது என்றும் சொல்பவர்கள்தான் பிரச்சினையை வளர்க்கிறார்கள். யதார்த்தத்தை இவர்கள் உணர்வதில்லை என்றார்

## வருடாந்த திருவிழா

திருநெல்வேலி புனித பிரான்சிஸ்கு சவேரியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நாளை புதன்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் மூன்றாம் திகதி வெள்ளிக்கிழமை வரை நீடிக்கவுள்ளது. தினமும் பிற்

## பூநகரி தாக்குதலால் நிலைமைமாறி விட்டது
### -- சபாநாயகர் அறிவிப்பு

(கொழும்பு)

''பூநகரி தாக்குதல் நடவடிக்கையைஅடுத்துநிலைமை மாறி விட்டது. இதனையிட்டு நான் துக்கப்படுகிறேன் எனினும் அங்கு நிலைமை விரைவில் சாத்தியமான நிலைக்குத் திரும்பும் பட்சத்தில் விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் மனந்திறந்துபேச்சுவார்த்தையில் ஈடுபட்டால் நிச்சயம் தீர்வு ஏற்படும். இதில் எனக்கு திடமான நம்பிக்கை உண்டு.

அத்தோடு, இனப்பிரச்சினைக்கான இராணுவத் தீர் விற்கு காலவரையறையும் விதிக்கப்பட்டது. முன்னைய தலைவர்கள் விதித்த காலக்கெடுக்கள் தோற்றுப் போனதை அவர் கருத்தில் கொள்ளவில்லை, எதிர்வரும் யூன் மாதத்திற்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என முதலில் பிரகடனப்படுத்தினார். ஆனால், மண்கிண்டி மலையிலும், ஒப்பரேசன் யாழ்தேவியிலும் ஏற்பட்ட தோல்வியின் பின்னர், அடுத்த வருட இறுதியில் நடைபெறவுள்ள ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தலின் முன் இனப்பிரச்சினைக்குத் தீர்வெனக் காலக்கெடுவை ஆறு மாதம் பிற்போட்டார்,

ஆனால், தற்பொழுது அதாவது பூநகரி இராணுவ-கடற்படைத் தளம் தகர்ப்பின் பின் ''இப்பிரச்சினைக்கு ஒரே இரவில் தீர்வு காண முடியாது. சிந்தித்துத்தான் முடிவெடுக்க வேண்டும்'' எனத் தெரிவித்துள்ளார். அதாவது, சுமார் ஆறு மாத காலத்திற்கு மேல் ஜனாதிபதிப் பதவி அனுபவம் அவருக்குத் தேவையாக இருந்தது. இது சிறிய பிரச்சினையல்ல, சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய பெரிய பிரச்சினை என்பதைப் புரிந்து கொள்வதற்கு ஆகும்.

அதாவது, அவரது பதவிக்காலத்தில் ஏற்பட்ட 1000க்கும் மேற்பட்ட இராணுவத்தினரின் இழப்பும், பல கோடி ரூபா பெறுமதியான ஆயுதத்தின் இழப்பும், இப்பிரச்சினை ஒரே இரவில் எடுக்கப்படும் தீர்மானத்தால் தீர்த்து வைக்கக் கூடியதல்ல என்பதை அவருக்கும் புரியவைக்கத் தேவையாக இருந்துள்ளது.

ஆனால், இவ்அனுபவத்தின் மூலம் இலங்கையில் இருப்பது பயங்கரவாதப் பிரச்சினையல்ல. இது ஒரு இனத்தின் பிரச்சினை என்றோ, இதற்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகாது அரசியற் தீர்வே சாத்தியமாகும் என்றோ ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க இன்றும் புரிந்து கொண்டதாக இல்லை. அதாவது, இராணுவத் தீர்வு பற்றிச் சிந்திப்பதற்கே ஓர் இரவு போதாது என்பது அவரது தொனியாக உள்ளது.

இந்நிலையில், இப்பிரச்சினை பயங்கரவாதப் பிரச்சினை அல்ல இனப்பிரச்சினை தான் எனப் புரிந்து கொள்வதற்கு இன்னமும் பல ஆயிரம் இராணுவத்தினரையும், பல கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களையும்சிறிலங்கா அரசு இழக்க வேண்டி இருக்கும். அதுவே இராணுவத்தினால் இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண முடியாது என்ற முடிவிற்கு அவரைக் கொண்டுவர உதவக்கூடும்.

ஆனால், இம்முடிவிற்கு டி பி. விஜேதுங்க இன்னும் ஒரு வருடம் பாக்கியிருக்கும் தனது 'பதவிக் காலத்திற்குள் வருவார் என எதிர்பார்க்க முடியாது, மேலும், அடுத்த வருடத்திற்குள் அவர் அதனைப் புரிந்து கொண்டாலும், அவர் எதிர்நோக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலும், அவரது கட்சி எதிர்நோக்கவுள்ள பாராளுமன்றத் தேர்தலும் அதனை வெளிக்காட்ட விடப்போவதில்லை.

இந்நிலையில், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு மட்டுமே ஒரே வழி என்பதையோ, அதற்குரிய நடவடிக்கைகளையோ சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தனது தற்போதைய பதவிக் காலத்தில் ஒருபோதும் எடுக்கப் போவதில்லை. வெல்ல முடியாத யுத்தம் என புரிந்து கொண்ட பின்னரும் அவர் தனது கொள்கையை மாற்றிக் கொள்ளப் போவதில்லை. அவ்வாறு மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியமும் அவருக்கு இருப்பதாக இல்லை. ஏனெனில், ஆளும் கட்சியில் இருந்து எதிர்க்கட்சிகள் வரை யுத்தத்தையே வலியுறுத்துகின்றன. அத்தோடு, யுத்தத்தில் மடிவதும், காயமுறுவதும் யுத்தம் பற்றிப் பேசும் அரசியல்வாதிகளின் பிள்ளைகளோஅன்றி அரசை நிர்வகிக்கும் உயர் குழாத்தின் பிள்ளைகளோ அல்ல. கூலிக்காக வந்த ஏழைச் சிங்களவர்களே அவர்களின் இறப்பில் இவர்களுக்கு என்ன நஷ்டம் ஏற்படப் போகிறது?

---

வும், ஜன்னல்களை மூடிவிட்ட போதிலும் ரயில் ஓடும்போது மழைநீர் வாரி இறைக்கப் பயணிகள் இரவு ரயிலில் பயணம் செய்வதாகவும் தெரிய வருகிறது.

## பேச்சு எதுவுமின்றி அண்ணன் தண்ணீரில் கிடந்தார்

### சுடுபட்டு மரணமானவரின் தம்பி விபரிப்பு

(தொல்புரம்)

அண்ணனும், நானும் வழமைபோல் படுப்புவலைத் தொழிலிற்குபொன்னாலைச் சந்தியிலிருந்து கடலிற்கு சென்றோம் நான்காம் பாலத்திற்கு வடக்குப் பக்கமாகவுள்ள கடலில் நாம் இருவரும் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை திடீரென எம்மை நோக்கி சரமாரியான துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. உடன் தண்ணீருக்குள் நான் படுத்துக் கொண்டேன். வேட்டுச் சத்தங்கள் சற்று ஓய்ந்ததும் அண்ணனை அழைத்த போது பேச்சு எதுவும் இன்றி தண்ணீரில் காணப்பட்டார். கிட்டச் சென்று பார்த்த போது இடதுபக்க காதடியில் துப்பாக்கிச் சன்னம்பட்டு காயப்பட்ட நிலையில் நினைவிழந்து காணப்பட்டார். ஏனைய மீனவர்களின் உதவியுடன் கரைசேர்த்த போது அண்ணன் மரணமடைந்து விட்டதை உணர்ந்து கொண்டேன் என நேற்று முன்தினம் காலை துப்பாக்கிப் பிரயோகத்தின் போது இறந்தவரின் தம்பியான சோமு திருச்செல்வம் (வயது 23) என்பவர்கண்ணீர் மல்க நமது நிருபரிடம் தெரிவித்தார். (41)

---

னார்

அவர் மேலும் பேசும் போது, பூநகரியிலும்,கிளாலியிலும் பெருந்தொகையான ஆயுதங்கள் இழக்கப்பட்டன. இவற்றின் பெறுமதி பல்லாயிரம் மில்லியன்களாகும் இந்த இழப்பை ஈடுசெய்ய வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பாடு இல்லை. இதனால்

---

## வருடாந்த திருவிழா

திருநெல்வேலி புனித பிரான்சிஸ்கு சவேரியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா நாளை புதன்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் மூன்றாம் திகதி வெள்ளிக்கிழமை வரை நீடிக்கவுள்ளது. தினமும் பிற்பகல் நான்கு மணியளவில் வழிபாடு தொடங்கும் எனவும், அருட்திரு லூயிஸ் பொன்னையா அவர்களின் மறையுரை இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

தோல்வி அடைந்துள்ளது. இது சிங்கள இனத்திற்கு தோல்வியல்ல

யுத்தத்தின் மூலமாக சொல்பவர்கள்தான் பிரச்சினையை வளர்க்கிறார்கள். யதார்த்தத்தை இவர்கள் உணர்வதில்லை என்றார்

## பூநகரி தாக்குதலால் நிலைமைமாறி விட்டது

### -- சபாநாயகர் அறிவிப்பு

(கொழும்பு)

''பூநகரி தாக்குதல் நடவடிக்கையை அடுத்துநிலைமை மாறி விட்டது. இதனையிட்டு நான் துக்கப்படுகிறேன் எனினும் அங்கு நிலைமை விரைவில் சாத்தியமான நிலைக்குத் திரும்பும் பட்சத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் பேசுவேன்'' இவ்வாறு சபாநாயகர் எம். எச். முகமட் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்;

விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் மனந்திறந்துபேச்சு வார்த்தையில் ஈடுபட்டால் நிச்சயம் தீர்வு ஏற்படும். இதில் எனக்கு திடமான நம்பிக்கை உண்டு.

பிரபாகரன் எங்கு அழைத்தாலும் நான் பேசத் தயாராக இருக்கிறேன் அந்த நிலைமை விரைவில் ஏற்படும் என நான் நம்புகிறேன் என்றார்.

---

## தி.மு.கவில் எனக்கு ஏற்பட்ட கதி எதிரிக்கும் ஏற்படக்கூடாது

### வை. கோபால்சாமி

(சென்னை)

தி.மு.கவில் எனக்கு ஏற்பட்ட கதி எனது எதிரிக்குக் கூட ஏற்படக் கூடாது. இவ்வாறு தி.மு. கவிலிருந்து வெளியேற்றப்பட்ட ராஜ்ய சபா உறுப்பினர் வை. கோபால்சாமி நெல்லை மாவட்டத்தில் பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், கழகத்தை விட்டு யாரையும் பிரிக்க நான் நினைக்கவில்லை. என்னிடம் நீதி இருக்கிறது என்று கருதி எனக்காக குரல் கொடுப்பவர்கள் மட்டும் என்னுடன் வந்தால் போதும் என்னோடு வந்தால் அரசியல் வாழ்வு அஸ்தமித்து விடும் என்று நினைப்பவர்கள் வழியிலேயே நின்று விடுங்கள் தனிமனிதனாகக் கூட நான் செல்வேன்.

எனது உயிரினும் மேலான தலைவனின் பாதுகாப்பு குறித்து யாரும் யோசிப்பதற்கு முன்பாகவே நான் மட்டும் தானே தலைவரின் பாதுகாப்பு பற்றி யோசித்து தொண்டர் படை அமைத்தேன். தலைவர் வருகிறார் என்றால் அவர் செல்லும் பாதை முழுவதிலும் செல்வேன். ஒரு கல் கிடப்பதற்கு என் மனம் சம்மதிக்காது. என் தலைவனின் காரின் டயர் கூட ஒரு கல்லில் ஏறக்கூடாது என்பதற்காக நான் கவனமாக இருப்பேன். இரவு 2மணி, 3மணிக்கு கூட தலைவர் பேசும் மேடை அமைக்கும் இடத்திற்கு வருவேன். அதன் உறுதியை பரிசோதிப்பேன். இப்படி கோவிலின் கர்ப்பக்கிரகம் போல் மேடையை அமைத்தேன், காவல் காத்தேன் இதெல்லாம் யாருக்காக?

என் தலைவரை கொல்லதிசெய்ததாக வந்த உளவுத்துறை அறிக்கையை அவர் குப்பைத் தொட்டியில் வீசிவிட்டு இந்தத் தம்பியை விட்டால் என் பாதுகாப்புக்கு யார் இருக்கிறார்கள் என்று கூறி இருந்தால் நான் ஜென்ம சாபல்யம் பெற்றிருப்பேன்.

தலைவரே உங்களைச் சுற்றி யார்இன்று இருக்கிறார்கள்? உங்களைப் பற்றி கீழ்த்தரமாகப் பேசியவர்கள் இருக்கிறார்கள்? உங்கள் தாயை இழித்து பழித்து பேசியவர்தான் உங்களுக்கு வேண்டிய தளபதியாக வீற்றிருக்கிறார். எனவே நான் எனக்காக எந்தக் குரலையும் உழுப்பவில்லை அண்ணா எருவாக்கிய கட்சியில் நீதி உண்டா? ஜனநாயகம் உண்டா? என்று அறியவே ஆசைப்படுகிறேன். என்றும் தெரிவித்தார்.

---

## விமான விபத்தில் 115 பயணிகள் பலி

மசிடோனியா குடியரசின் பயணிகள் விமானம் ஒன்றுபனிபடர்ந்த மலையுடன் மோதியதில் 115 பயணிகள் பலியாகினர். ஒருவர் மட்டும் உயிர் தப்பினார். ஜெனிவாவிலிருந்து மசிடோனியா சென்ற முன்னாள்சோவியத் தயாரிப்பு விமானம் பனிமூட்டம் காரணமாக திருப்பிவிடப்பட்டபோது விபத்திற்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

---

## கழகத்தை ஊறுபடுத்த எவரும் முயலவேண்டாம்

### - மு. கருணாநிதி

(சென்னை)

கழகத்தை ஊறுபடுத்தும் முயற்சியில் எவரும் ஈடுபடவேண்டாம் என்று தி. மு க. தலைவர் மு கருணாநிதி சென்னையில் வெளியிட்ட ஒரு அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

அவ் அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது என் மீது நம்பிக்கை இல்லை என்பதை கோபால்சாமிக்கு ஆதரவான எட்டு மாவட்டச் செயலாளர்களும் தெரிவித்துள்ளனர் அவர்கள் கழகத்துக்கு ஊறு விளைவிக்கும் முயற்சியில் ஈடுபட்டு உள்ளனர். அவர்களது குற்றச்சாட்டு தவறானது.

அடிப்படை அற்ற உண்மைகளை நம்புவதைப்போல செய்து ஆயிரங்காலத்துப் பயிரான இந்தக் கழகத்துக்கு ஊறு தேட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் தாக்குபவர்கள் யாராக இருந்தாலும் தாங்குபவர்கள் நாமாக இருப்போம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

---

## காயம்பட்ட புலிகளுக்கு கோபால்சாமி உதவினார்

### தி. மு. க. தலைமையின் குற்றச்சாட்டு

(சென்னை)

ஈழத்தில் காயம்பட்ட சிலர் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கு தனது தம்பியார் வை. ரவிச்சந்திரன் மூலமாக உதவினார் என்பதும் கூட தி.மு.க தலைமையினால் திரு. வை. கோபால்சாமிமீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் ஒன்றாகும் அத்துடன் கழக தலைமைக்கு தெரியாமல்ஈழம் சென்று வந்தார் என்றும், கருணாநிதியை இனிமேல் ஏ. கே. 47 மூலம் தான் சந்திக்க வேண்டும் என்று எழுதப்பட்ட கவிதையை பத்திரிகைகளுக்கு கொடுத்தார் என்றும் வை. கோபால்சாமி மீது தி மு. க தலைமைகுற்றம்சாட்டியுள்ளது இவை உட்படபத்துகுற்றச்சாட்டுக்கள் அடங்கியநோட்டீஸ் அறிவித்தல் ஒன்றை வை கோபால்சாமிக்கு அனுப்பியுள்ள தி. மு. க பொதுச் செயலாளர் பேராசிரியர்அன்பழகன் இவற்றின் அடிப்படையில் அவர் ஏன் கட்சியிலிருந்து நீக்கப்படக் கூடாது என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

## 31-ம் நாள் நினைவஞ்சலியும்

# அந்தியேட்டி அழைப்பும்

தாயின்மடியில்:
(வல்வைநகர்)
05
—
09
—
1949



இறைவனடியில்
(இன்பநகர்)
24
—
10
—
1993

## திரு. சிவசாமி தங்கவேல்

அன்னார் நோய்வாய்ப்பட்டிருந்த காலத்திலும் அன்னாரின் இறுதிக்கிரியைகளின் போதும் எமக்கு ஆறுதலும் தேறுதலும் சொல்லி சகலவிதத்திலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம் இன்று 23-11-93 வீட்டுக் கிருத்தியங்களிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

இன்பருட்டி,
அல்வாய் வடக்கு,
அல்வாய்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமகன்,
பேர்த்தி, குடும்பத்தினர்.

(சி-7958)

## 3ஆம் ஆண்டு நினைவில்



# மாவீரர் நினைவுப் பந்தல் சங்கானையில் திறப்பு

(நமது நிருபர்)

தமிழீழ மாவீரர் வார ஆரம்ப நாளான நேற்றுமுன் தினம் சங்கானையில் மாவீரர் நினைவாக நிரந்தர மண்டபம் ஒன்று திறந்துவைக்கப் பட்டது.

காலை 11 மணியளவில் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட விசேட தளபதி திரு.செல்வராஜா தமிழீழ தேசியக்கொடியை ஏற்றி வைக்க வலிகாமம் பொறுப்பாளர் திரு டிஸ்கோ உறுதியின் உறைவிடத்திற்கு மாலை அணிவித்தார். இதனைத் தொடர்ந்து விடுதலைக்காக இன்னுயிர் ஈந்த போராளிகளுக்கும் பொதுமக்களுக்குமாக இருநிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் சங்கானை பிரதான வீதியில் பிரமாண்டமான முறையில் அமைக்கப்பட்ட நிரந்தர மாவீரர் நினைவு மண்டபத்தை தமிழீழ மாவீரர்பணிமனைப்பொறுப்பாளர் திரு. பொன்தியாகம் அவர்கள்நாடாவை வெட்டித் திறந்துவைக்க விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி தணிகைச் செல்வி, யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைத்தனர்.

சங்கானை வலிமேற்கு வர்த்தக சங்கத்தினரால் அமைக்கப்பட்ட இம் மாவீரர் நினைவு மண்டபத்தில் 93 மாவீரர்களின் உருவப்படங்கள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளன.

# மாவீரர்வாரக் கூட்டங்கள் இன்று எட்டு இடங்களில்

(யாழ்ப்பாணம்)

வட்டரீதியாக ஒழுங்குசெய்யப்பட்டுள்ள மாவீரர் வாரக் கூட்டங்கள் இன்று எட்டு இடங்களில் நடைபெறவுள்ளன. இக்கூட்டங்களில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கலந்துகொண்டு உரையாற்றுகின்றனர்.

- நல்லூர் வட்டம்- கோண்டாவில் மகாவித்தியாலயம்- இரவு 7.30 மணி
- சங்கானை வட்டம் - அராலி வடக்கு மயிலியப்புலம் கந்தசுவாமி கோவில் முன்றல்- இரவு 7 30 மணி
- கொடிகாமம் வட்டம்- வாணி மகாவித்தியாலயம் இரவு 8-00
- கைதடி வட்டம் நாவற்குழி மகாவித்தியாலயம்- இரவு 8.00 மணி
- உடுப்பிட்டி வட்டம்- உடுப்பிட்டி கம்பர்மலை பாரதி சனசமூக நிலையம் இரவு 7.00 மணி
- தீவகக் கோட்டம்- அரியாலை மணியரசன் குடியிருப்பு- இரவு7 30மணி யாழ். மாவட்டம்- கடற்புலிகள் பிரிவு
- வலிகாமம் கிழக்கு- குருநகர் ச. ச. நிலையக் கலையரங்கு- இரவு 7.00 மணி
- வடமராட்சி கிழக்கு- மாமுனை விளையாட்டு மைதானம் - இரவு 7.00 மணி

### வடமராட்சியில்

கோவிலடி சந்தியில் இருந்து மாவீரர் துயிலும் எள்ளங்குளம் வரை வீதிகள் இருபுறமும் மஞ்சள் சிவப்பு நிறங்களால் அலங்கரிக் கப்பட்டுள்ளன.

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், பனம்பொருள் அபிவிருத்தி அலுவலகம், அரச அலுவலகம், அகதிகள் முகாம்கள், காவல்துறை நிலையங்கள் நீதிமன்ற அலுவலகக் கட்டடங்கள், மாதர் சங்கங்கள் சனசமூக நிலையங்கள் விடுதலைப்புலிகள் முகாம்கள், அலுவலகங்கள் மற்றும் மக்கள் கூடும் கேந்திர நிலையங்கள் அனைத்தும் அலங்கரிக் கப்பட்டு காணப்படுகின்றன (யோ)

### குண்டு வீச்சு

ள்ளே சென்று திரும்பிவரும் போது குண்டு வெடித்ததாகவும் அப்போது தனது கணவர் விழுந்து கிடப்பதைக் கண்டு ஓடிச்சென்று பார்த்த போது அவர் அறிவு நினைவற்று கிடந்ததை கண்டதும் உடனடியாக மருத்துவமனைக்கு அவரை கொண்டுவந்ததாகவும் அப்போது அவர் இறந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டதெனவும் இறந்தவரின் மனைவி தெரிவித்தார் (சி)

### அரசின்

ரத்வத்தை கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில் பூநகரித் தாக்குதலில் புலிகள தரப்பில் கொல்லப்பட்டவர்கள் குறித்து விடுதலைப் புலிகள் உண்மைத் தகவல்களை வெளியிட்டுள்ளனர். அரச தரப்பு இழப்பு என்ன? அரசின் பொறுப்பற்ற செயலால் எமது படையினர் மரணமடைய வேண்டியுள்ளது.

பூநகரித் தாக்குதலில் விடுதலைப் புலிகள் 120 எம் எம். ரகத்தைச் சேர்ந்த ஆறு பீரங்கிகளைக் கைப்பற்றியுள்ளனர். இந்தப் பீரங்கிகளில் ஒன்று மட்டும் இருந்தாலே போதும் புலிகளின் பலம் அதிகரித்துவிடும் பிரதி சபாநாயகர் கூறியது போலவே பிரபாகரன் நாளை மறுதினம் கொழும்பு வரை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று அவர் மேலும் கூறினார்

### கொழும்பிலும்

வெடிப்புகள் நடைபெறுவதற்கான சூழ்நிலை காணப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப் படுகிறது.

இதனையடுத்து இப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளதாககூறப்படுகிறது.

### வெளிச்சம்

வழங்கிய வாழ்த்துரையும், பிரம்மஞானி எழுதிய 'மனிதனைத் தேடும் மனிதன்' கட்டுரையின் சென்ற இதழ் தொடர்ச்சியும் இடம்பெறுகின்றன.

மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன்தியாகம் அவர்கள் வழங்கிய மாவீரர் நாள் செய்தியும், தமிழீழத் தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் அவர்களின் முப்பத்தொன்பதாவது பிறந்த நாளையொட்டிய வாழ்த்துக் கவிதையும், மற்றும் புதுவை இரத்தினதுரை, பழஞ்சோற்றுப்பாவலன், சி. செழியன், மு. வே. யோ. வாஞ்சிநாதன், வீ. பரந்தாமன், சா வே. பஞ்சாட்சரம், முருகனடியான், சங்கீதன், அமரேசன் ஆகியோரின் கவிதைகளும் இடம்பெறுகின்றன.

### 19 படை

ற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன கடற்படை மீது நடைபெற்ற தாக்குதல்களில் இத் தாக்குதலில் தான் ஆக கூடிய கடற்படையினரை சிறிலங்கா கடற்படையினர் இழந்துள்ளனர்

இத் தாக்குதலில் பலியான அல்லது காணாமல் போன இராணுவத்தினர் 637 பேர் என்றும் இதில் இராணுவ

# மரண அறிவித்தல்கள்



## எம். எஸ். வின்சன்ற்

எம், எஸ். வின்சன்ற் காலமாகிவிட்டார், (இவர் குருநகர் மாட்டிறைச்சிக்கடை 1ஆம் நம்பர் உரிமையாளர்) அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 4 மணியளவில் இல. 10, இராசேந்திரா வீதியிலுள்ள இவரது இல்லத்தில் இருந்து நல்லடக்கத்திற்காக 'பரிசுத்த கொன்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சிக்கடை
உரிமையாளர் சங்கம்,

குருநகர் சந்தை, சின்னக்கடை. (6673)

## கணபதிப்பிள்ளை விசாலாட்சி

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், இலக்கம் 7, பிரப்பங்குளம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை விசாலாட்சி 22-11-1993 இல் காலமானார். இவர் காலம் சென்ற சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளை (வர்த்தகர் யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், பத்மாவதி (ஆசிரியை யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி), பஞ்சாட்சரம் (பிரதம எழுதுவினைஞர் கச்சேரி, யாழ்ப்பாணம்), செல்லத்துரை (வருமானவரி இலாகா கொழும்பு), சரஸ்வதி, லோகேஸ்வரி (கட்டட திணைக்களம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அருமைத் தாயாரும், திருமதி தியாகராசா கனகம்மாவின் சிறிய தாயும், புங்குடுதீவு திரு. சுப்பிரமணியம் குமாரசாமி அர்களின் மைத்துனியும், சு மகாலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்), ப. இராசேஸ்வரி, செ. மங்களேஸ்வரி, கா. சுந்தரலிங்கம் (எழுதுவினைஞர் கச்சேரி. யாழ்ப்பாணம்), க குழந்தைவேல் (யாழ்ப்பாண மாநகரசபை) ஆகியோரின் அன்பு மாமியும், முருகவேள் (கனடா), பூங்கோதை (மொறட்டுவை பல்கலைக் கழகம்), நந்தகுமார் (கனடா), சுகந்தி, மாலினி (கனடா), துஷ்யந்தி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), மயூரன் (பரியோவான் கல்லூரி), செந்தூரன் (இந்துக் கல்லூரி), ரமேஷ்குமார் (யாழ். வைத்தீஸ்வராக்



# கப்டன் ரஷாத்

**சிவசுப்பிரமணியம் சுரேஸ்குமார்**

(கணேசபுரம், கிளிநொச்சி)

தாயின்மடியில் **31-03-1973**

வீரச்சாவு **23-11-1990**

சிங்களத்து சின்னத்தனத்தை
சிதைத்தெறிய வென்று
சீறும் வேங்கையெனப் புறப்பட்டாய்!
தமிழனவன் யாருக்கும் தாழான்
யாரையுமே தாழ்த்தான் என்று
தரணிக்கு உணர்த்திய
தளபதியின் கட்டளையை ஏற்று
மாவீரர் தின நன்நாளில்
மாங்குள முகாம் சென்றாய் மாவீரா!
தளமது தான் திரும்பாமல்
தரணியை விட்டகன்றாய்
ரஷாத்தே! தசாப்தங்கள் சென்றாலும்
தாய் தான் உனைக் காண்பாளோ
இலட்சிய வாதிகள் இறப்பதும் இல்லை
இலட்சிய வேகங்கள் அழிவதும் இல்லை
அந்தோ நடுகல்லை நாட்டிவிட்டே
கண்ணீர் சொரிய நின்றே செலுத்துகின்றோம்
கண்ணீர் அஞ்சலியை.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர், நண்பர்கள், உறவினர்கள்.

(6669)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

ஃ கைதடி வட்டம்
நாவற்குழி மகாவித்தியாலயம்- இரவு 8.00 மணி
ஃ உடுப்பிட்டி வட்டம்-

### குண்டு வீச்சு

ள்ளே சென்று திரும்பிவரும் போது குண்டு வெடித்ததாகவும் அப்போது தனது கணவர் விழுந்து கிடப்பதைக் கண்டு ஓடிச்சென்று பார்த்த போது அவர் அறிவு நினைவற்று கிடந்ததை கண்டதும் உடனடியாக மருத்துவமனைக்கு அவரை கொண்டுவந்ததாகவும் அப்போது அவர் இறந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டதெனவும் இறந்தவரின் மனைவி தெரிவித்தார் (சி)

### வடமராட்சியில்

கோவிலடி சந்தியில் இருந்து மாவீரர் துயிலும் எள்ளங்குளம் வரை வீதிகள் இருபுறமும் மஞ்சள் சிவப்பு நிறங்களால் அலங்கரிக் கப்பட்டுள்ளன.

பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், பனம் பொருள் அபிவிருத்தி அலுவலகம், அரச அலுவலகம், அகதிகள் முகாம்கள், காவல்துறை நிலையங்கள் நீதிமன்ற அலுவலகக் கட்டடங்கள், மாதர் சங்கங்கள் சனசமூக நிலையங்கள் விடுதலைப்புலிகள் முகாம்கள், அலுவலகங்கள் மற்றும் மக்கள் கூடும் கேந்திர நிலையங்கள் அனைத்தும் அலங்கரிக் கப்பட்டு காணப்படுகின்றன (யோ)

# நெஞ்சில் நிறைந்து நிற்பவர்கள்

எமது பாடசாலையில் கல்வி கற்று மண்மீட்கப் போராடி மரணித்த வீரர்களே! மாவீரர் நன்னாளில் நினைக்கின்றோம் உங்களை

கப்டன் தேவசுஜி (சுபத்திரா இரத்தினம்), லெப்டினன்ட் தியாகு (யோகநாதன் இராசேந்திரம்), 2ஆம் லெப்டினன்ட் செந்தமிழ்ச்செல்வன் (கேதீஸ்வரன் கந்தையா), 2ஆம் லெப்டினன்ட் தேவானந்தி (தேவராணி சுப்பிரமணியம்), 2ஆம் லெப்டினன்ட் தங்கச்சி (நிமலகாந்தன் முருகையா), வீரவேங்கை வெற்றி (அருள்மோகன் இரத்தினம்).

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.
யா/கீரிமலை நகுலேஸ்வர ம. வி.
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், சபை.

(6670)

# அறிவித்தல்

## St. Patrick's College, Jaffna

### (1) ஆசிரியர், மாணவர் கவனத்திற்கு

8-ம், 9-ம், 10-ம் ஆண்டு மாணவர்களுக்கான வகுப்பேற்ற பரீட்சையும், ஏனைய ஆண்டுக்கான பரீட்சையுடன் சேர்த்து 29 - 11 - 1993 திங்கட்கிழமை ஆரம்பமாகும் நேரசூசியை கல்லூரி விளம்பரப் பலகையில் பார்வையிடலாம்.

### (2) புதிய மாணவர் அனுமதிக்கான பெற்றோர் கூட்டம்

அனுமதிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெற்றோருக்கான கூட்டம் 29-11-93 பிற்பகல் 1. 00 மணிக்கு நடைபெறும்.

**அதிபர்**

(சி- 7979)

வாழ்த்துக் கவிதையும், மற்றும் புதுவை இரத்தினதுரை, பழஞ்சோற்றுப்பாவலன், சி. செழியன், மு. வே. யோ. வாஞ்சிநாதன், வீ. பரந்தாமன், சா வே. பஞ்சாட்சரம், முருகனடியான், சங்கீதன், அமரேசன் ஆகியோரின் கவிதைகளும் இடம்பெறுகின்றன.

### 19 படை

ற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன கடற்படை மீது நடைபெற்ற தாக்குதல்களில் இத் தாக்குதலில் தான் ஆக கூடிய கடற்படையினரை சிறிலங்கா கடற்படையினர் இழந்துள்ளனர்

இத் தாக்குதலில் பலியான அல்லது காணாமல் போன இராணுவத்தினர் 637 பேர் என்றும் இதில் இராணுவ அதிகாரிகள் 17 பேர் உள்ளடங்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### தமிழ்த்

மாணவர் அமைப்பும், பலநோ கூ. சங்கங்களும் வழங்க முன்வந்துள்ளதுடன் சான்றிதழ்களை கல்வித் திணைக்களமும் பாராட்டுச் சான்றிதழ்களை தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையும் வழங்கவுள்ளன.

### பிரிகேடியர்

குழுவின் தலைமை அலுவலகத்தில் முப்படைகளுக்குமான இணைப்பதிகாரியாகக் கடமையாற்றி வந்தார். அத்துடன் கடந்த ஆண்டு இறுதிப் பகுதியில் யாழ் மாவட்டத்துக்கான கட்டளையிடும் அதிகாரியாக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பூநகரி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் எதிரொலியாகவே மேற்படி நியமனம் செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி இரு மாவட்டங்களிலும் பாதுகாப்புநிலைமைகளை மேலும் பலப்படுத்தும் முயற்சியில் பிரிகேடியர் அசோகாகே ஜெயவர்த்தனா ஈடுபடுவார் என்றும் கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### பூநகரி

முனசிங்கா முல்லைத்தீவு மாவட்டத்தில் வெலிஓயா பகுதிக்கு தளபதியாக நியமிக்கப்பட்டார். இவர், கூட்டுப்படை நடவடிக்கை தலைமையகம் செயற்பட்டபோது இராணுவத்தரப்பு பேச்சாளராக இருந்தவராவார்.

மேலும், கேணல் ஈ. எம். பொறாளை ஊர்காவற்றுறைக்கும் மற்றும் மண்டைதீவிற்கும், கேணல் எஸ். கோட்டேகொட பூநகரிக்கும் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இல் காலமானார். இவர் காலம் சென்ற சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளை (வர்த்தகர் யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், பத்மாவதி (ஆசிரியை யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி), பஞ்சாட்சரம் (பிரதம எழுதுவினைஞர் கச்சேரி, யாழ்ப்பாணம்), செல்லத்துரை (வருமானவரி இலாகா கொழும்பு), சரஸ்வதி, லோகேஸ்வரி (கட்டட திணைக்களம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அருமைத் தாயாரும், திருமதி தியாகராசா கனகம்மாவின் சிறிய தாயும், புங்குடுதீவு திரு. சுப்பிரமணியம் குமாரசாமி அர்களின் மைத்துனியும், சு மகாலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்), ப. இராசேஸ்வரி, செ. மங்களேஸ்வரி, கா. சுந்தரலிங்கம் (எழுதுவினைஞர் கச்சேரி. யாழ்ப்பாணம்), க குழந்தைவேல் (யாழ்ப்பாண மாநகரசபை) ஆகியோரின் அன்பு மாமியும், முருகவேள் (கனடா), பூங்கோதை (மொறட்டுவை பல்கலைக் கழகம்), நந்தகுமார் (கனடா), சுகந்தி, மாலினி (கனடா), துஷ்யந்தி (யாழ். இந்து மகளிர் கல்லூரி), மயூரன் (பரியோவான் கல்லூரி), செந்தூரன் (இந்துக் கல்லூரி), ரமேஸ்குமார் (யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி), நிரஞ்சலா (யாழ் வைத்தீஸ்வராக்கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று (23-11-1993) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 4-00 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்

தகவல்:

**க. பஞ்சாட்சரம்,**
(மகன்)

இல 7, பிரப்பங்குளம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்,

(6674)

# நாகலிங்கம் இராமலிங்கம்

வீமன்காமம் வடக்கு தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், தற்சமயம் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகக்கொண்டவருமான திரு. நாகலிங்கம் இராமலிங்கம் (முன்னாள் ஓய்வுபெற்ற தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆசிரியர்) அவர்கள் நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் பொன்னம்மா தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்ற ராசமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மூத்ததம்பி பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், நா.இராமநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), நா. கனகலிங்கம்(ஓய்வுபெற்ற பொறியியலாளர்), நா. நடராஜா (ஐ.நா. சபை ஆலோசகர், கனடா), நா.அம்பிகைபாகன் (அம்பிகா ஸ்ரோர்ஸ், கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (23-11-93) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தாவடி மயானத்தில் தகனம்செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;

**நா. அம்பிகைபாகன்**

முத்தட்டுமட ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,

(6675)